**R 5290 (page 243)** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்

# GOD MANIFEST IN THE FLESH

**(R5291 : page 243)**

## தேவன் பிரபுக்களில் வெளிப்படுவார்

கிறிஸ்துவின் இராஜ்யம் மனுஷர் மத்தியில் ஸ்தாபிக்கப்படும்பொழுது, மேசியா ஆயிர வருஷம் பூமியின் பிரதிநிதிகளைக்கொண்டு ஆளுகைசெய்து, மனுக்குலத்தை மேம்படுத்தும்படியான ஓர் ஏற்பாட்டை தேவன் செய்திருக்கின்றார். இந்த வேலைக்காகத் தேவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் பிற முற்பிதாக்களை ஆயத்தம்பண்ணி வைத்திருக்கின்றார். இவர்கள் மனித பரிபூரணத்தில் உடனடியாக உயிர்த்தெழுப்பப்படுவதற்குப் பாத்திரராகக் கருதப்பட்டுள்ளனர். இவர்கள் உயிர்த்தெழுதலில் சுபாவ-மாற்றத்தைப் பெறமாட்டார்கள்; ஏனெனில் இவர்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை. யோர்தானில் நமது கர்த்தரைத் தவிர, மற்றப்படி பெந்தெகொஸ்தே நாள் வரை, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் யாரும் இல்லை. இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால்,
**R5291 : page 244**
பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை. ஆகையால் அந்த முற்பிதாக்கள் தேவனுக்குப் பிரியமாயிருந்தார்கள் என்ற சாட்சியை மட்டுமே பெற்றிருந்தார்கள். அவர்கள் தேவனுக்கும், நீதியின் கொள்கைகளுக்கும் நேர்மையாயிருந்தபடியினால், இந்த முற்பிதாக்களில் சிலர், கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைப் பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினால் வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத்தோல்களையும், வெள்ளாட்டுத்தோல்களையும், போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள். உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை. (எபிரேயர் 11:37, 38)

இவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தத்தைப் பெற்றிருந்தாலும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையவில்லை. உதாரணத்திற்கு, தேவன் ஆபிரகாமிடம்: "நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கு கொடுப்பேன்" என்று வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். தேவனுடைய வார்த்தை உண்மையாவதற்கு ஆபிரகாம் உயிர்த்தெழுந்து வரவேண்டும். அவர் அந்தப் பூமியின் நிலத்தைப் பெற வேண்டும். ஆனால் அவரிடம் கனம், மகிமை மற்றும் சாகாமை பற்றியோ, தெய்வீகச் சுபாவத்தில் பங்குபெறுவது மற்றும் இயேசுவோடு உடன் சுதந்தரராவது பற்றியோ எதுவும் சொல்லப்படவில்லை. (அப்போஸ்தலர் 7:5; எபிரேயர் 11:8, 10, 17, 39, 40)

இது இயேசுவில் ஆரம்பித்தது. கிறிஸ்து நித்திய ஜீவன் மற்றும் அழியாமையைப் பற்றின அறிவை மாத்திரம் மனிதருக்குக் கொண்டுவராமல், இந்த ஜீவனை அவரோடு பெற்றுக்கொள்ளும் சிலாக்கியம் ஒன்று காணப்படுகின்றது என்பது பற்றின அறிவையும் கொண்டு வந்தார். "முதலாவது கர்த்தர் மூலமாய் இந்த இரட்சிப்புக்குறித்து அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதிப்பண்ணப்பட்டிருக்கிறது" (எபிரெயர் 2:3). ஆனால் தேவனை நம்பும் அளவுக்கு, அவருடைய வாக்குத்தத்தத்தின்பேரில் விசுவாசம் வைக்கும் அளவுக்கு, அந்த வாக்குத்தத்தம் நிறைவேற காத்திருக்கும் அளவுக்கு முற்பிதாக்கள் விசுவாசம் கொண்டிருந்தார்கள். தேவன் சாபத்தை நீக்கிப் போடுவார் என்ற தகவலை மட்டுமே அவர்கள் பெற்றிருந்தார்கள். ஆபிரகாமின் சந்ததிதான் தேவனுடைய ஆசீர்வாதம் கடந்துவருவதற்குரிய மகிமையான வழியாக இருக்க வேண்டியிருந்தது. "உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்." ஆகையால் அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையவில்லை என்று பரிசுத்த பவுல் அடிகளார் நமக்குக் கூறுகின்றார்.

"அவர்கள் (சுவிசேஷ யுக சபையாகிய) நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்." (எபிரேயர் 11:40)

நாம் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு முன்பு, முற்பிதாக்கள் அவர்களுக்குரிய ஆசீர்வாதத்தைப் பெறமுடியாது. பழைய ஏற்பாட்டுக்காலத்து உண்மையுள்ளவர்கள் வந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பு, மணவாட்டி மகிமைப்படுத்தப்பட வேண்டும். பின்னர் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் மற்ற பழைய ஏற்பாட்டுகால பாத்திரர்கள் அனைவரும் கிறிஸ்துவின் முதல் பிள்ளைகளாக இருப்பார்கள். அவர்கள் பிதாக்களுக்குப் பதிலாக குமாரர்களாக இருப்பார்கள். பிறகு அவர்களைப் பிரபுக்களாக, பூமியை ஆளுகிறவர்களாக வைப்பார் (சங்கீதம் 45:16). பரிபூரண மனிதர்களாக உயிர்ப்பிக்கப்பட்டு, தேவனுடைய பரிபூரண சாயலில் இருப்பார்கள். இந்தப் பழங்கால பாத்திரவான்கள் ஒவ்வொருவரிலும், தேவன் மாம்சத்தில் வெளிப்படுவார். அப்பொழுது அவர்கள் பூமியின் பிரபுக்களாக இருந்து, கிறிஸ்துவின் இராஜ்யத்தின் கீழ்ப் பூமியை ஆளுகைசெய்வார்கள்.

நீங்கள் ஆபிரகாமையும், ஈசாக்கையும், யாக்கோபையும் சகல தீர்க்கத்தரிசிகளையும் தேவனுடைய இராஜ்யத்தில் இருக்கிறவர்களாகக் காண்பீர்கள் என்று இயேசு சொன்னபோது மேற்கூறிய கருத்தையே உறுதிப்படுத்தினார் (லூக்கா 13:28). அவர்: "இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது" என்று கூறினார் (யோவான் 14:19). ஒருவேளை உயிர்த்தெழுதலின் வல்லமையினால் நாம் ஆவியின் நிலைமைக்கு மாற்றப்படவில்லையென்றால், மனித தளத்தில் இருக்கப்போகிறவர்களைப் போலவே நாமும் அவரைக் காண முடியாதவர்களாய் இருந்திருப்போம். "கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும், இன்னும் உயிரோடு இருக்கிறவர்களும் அவர் வெளிப்படுகையில் அவருக்கு ஒப்பாயிருப்பார்கள். ஒரு நிமிஷத்திலே, ஓர் இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்படுவார்கள்." நாம் மறுரூபமாகும் அந்த நிமிஷத்திலே, நமது கர்த்தரை மட்டுமல்ல, எல்லா பரிசுத்தத் தூதர்களையும், இப்பொழுது நம்முடைய கண்களுக்குப் புலப்படாதவர்களாக ஆவிக்குரிய தளத்தில் காணப்படும் அனைவரையும் காண்போம். இவர்களால் மனுக்குலத்தைப் பார்க்கமுடியும்; ஆனால் மனுக்குலத்தாரால் இவர்களைப் பார்க்கமுடியாது.

தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்; முதலில் ஆதாமின் விஷயத்தில்; இரண்டாவது இயேசுவின் விஷயத்தில்; மூன்றாவது உலகத்தில் உள்ள மற்றவர்களைக்காட்டிலும் மேன்மையான உயிர்த்தெழுதலை அடைபவர்களாகிய முற்பிதாக்களின் மாம்சத்தில் வெளிப்படுவார்.

-------------------------